**செய்தி வெளியீடு எண் : 435** **நாள் : 03.03.2023**

**<u>செய்தி வெளியீடு</u>**

இன்று 03.03.2023, சென்னை, கிண்டி, சிட்கோ தலைமை இடத்தில் தமிழ்நாடு அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் 'FaMe TN' நிறுவனம் மற்றும் ஒன்றிய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையும் இணைந்து விற்பனையாளர் மேம்பாட்டிற்காக 2 நாட்கள் நடைபெறும் **"MSME Connect 2023"** தொழில் கண்காட்சி மற்றும் விற்பனையாளர் மேம்பாட்டு நிகழ்ச்சியை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அரசு செயலாளர் திரு. வி. அருண் ராய், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்கள்.

இந்நிகழ்ச்சியில் 500க்கும் மேற்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், சுமார் 30 பெரிய அரசு நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் பங்கேற்றன. பெரிய அளவிலான அலகுகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களான AVNL(HVF, EFA), OCFAV, BHEL, ரயில்வே துறை, ஆண்ட்ரூ யூல், சென்னை போர்ட் டிரஸ்ட், VOTPA, ICF, AAI, CMRL, MFL, CPCL, IOCL, BEL, DCIL, NLC, Balmer, Lawrie & Co. Ltd, TIIC, FaMe TN, TANSIDCO, KVIC, NSIC மற்றும் TNPCB, CPCB, BIS, EPFO போன்ற ஒழுங்குமுறை அமைப்புகள் மற்றும் நிதி நிறுவனங்கள் பங்கேற்றன.

இந்நிகழ்ச்சியில் தொழில் வணிக ஆணையர் திருமதி. சிஜிதாமஸ் வைத்யன், இ.ஆ.ப., சிட்கோ மேலாண்மை இயக்குநர் திருமதி. மதுமதி, இ.ஆ.ப, CPCL இயக்குநர் திரு. எஸ். கிருஷ்ணன், சென்னை விமான நிலைய இயக்குநர் டாக்டர். சரத் குமார், AVNL மேலாண்மை இயக்குநர் திரு. சஞ்சய் திவேதி, MSME இணை இயக்குநர் திரு. சுரேஷ் பாபுஜி, FaMe TN பொது மேலாளர் திரு. சு. சக்திவேல், TANSTIA தலைவர் திரு. மாரியப்பன், FASII தலைவர் திரு. கார்த்திகேயன் மற்றும் பல்வேறு பொதுத்துறை நிறுவனங்களின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in